**மெய்யியல் தேடலில் தருக்க சங்கிரகம்**
**சைவ சித்தாந்த நோக்கு**

இ. லம்போதரன் MD
சைவ சித்தாந்த பீடம், கனடா
www.knowingourroots.com

**வரையறுத்தல்:**
மெய்யியல் Vs இறையியல்
தேடல்
தருக்கம்
சங்கிரகம்
சைவ சித்தாந்த நோக்கு

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

**தரிசனங்கள்:** மெய்யியலில் ஒவ்வொருவருடைய பார்வை
OBJECT OF KNOWLEDGE
MEANS OF KNOWLEDGE
அவர் எப்படி பார்த்தார்?
ஏன் அப்படிப் பார்த்தார்?
என்ன பார்த்தார்?

யானையை விழிப்புலன் அற்ற ஐவர் பார்த்த கதை

*உண்மையை ஒரு புத்தகத்துக்குள் அடக்க இயலாது – சிவயோகர் சுவாமிகள்*

*பொல்லா வினையேன், புகழுமாறு ஒன்று அறியேன். – திருவாசகம்*

*தொண்டனேன் விளம்புமா விளம்பே – திருவிசைப்பா*

## அணுகுமுறை/ MEANS OF PERCEPTION/ பிரமாணங்கள்

### பிரமாணம் 1. பிரத்தியட்சம்/ PRATYAKSHA/ காண்டல்/காட்சி :

ஐம்புலன்களால் அறியப்படும் அறிவு. Pratyaksha is defined as that knowledge arises from the contact of the sense organs with the object.

நிர்விகல்பக் காட்சி: INDETERMINATE PERCEPTION
சவிகல்பக் காட்சி: DETERMINATE PERCEPTION

சைவசித்தாந்த காட்சிகள்: பொறிக்காட்சி/ வாயில்காட்சி, புலன்காட்சி/ மானதக்காட்சி, தன்வேதனைக் காட்சி, ஐயக்காட்சி, திரிபுக்காட்சி, பிரமைக் காட்சி, யோகக்காட்சி, ஞானக்காட்சி

கண்ணால் கண்டதும் பொய்; காதால் கேட்டதும் பொய்
தீர விசாரித்து அறிந்ததே மெய்

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும்
ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள – திருக்குறள்

திறவோர் காட்சியின் தெளிந்தனம் ஆதலின்.. புறநானூறு

யாதும் ஊரே; யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா.
நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல் பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணை போல ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

All towns are ours; Everyone is our kin.
Evils and good do not come to us by others.
Nor do suffering and the end of suffering.
Death is nothing new.
We do not rejoice when living is sweet.
When we suffer, we do not say that living is miserable.

Through the vision of those who have wisdom,
We know the precious life makes its way
Like a raft riding a powerful huge river
That roars endlessly, fed by cold rains with
Bolts of lightning as it crashes against rocks.
So, we are not awed by those who are great.
Much less, we do not despise those who are weak!

**- புறநானூறு -192**

***உலகாதயர் – இது ஒன்றே பிரமாணம். இவர்களுக்கு நூல் சார்வாகம்; இதைச் செய்தவர் சார்வாகர்.***

**பிரமாணம் 2. அனுமானம்/ கருதல்/ ANUMAANA/ INFERENTIAL KNOWLEDGE FROM PREVIOUS EXPERIENCE**

**2.1. பிறர் பொருட்டு அனுமானம்/ PARAARTHA ANUMAANA**

**FIVE MEMBERS OF SYLLOGISM**

- **I. பிரதிக்ஞை/மேற்கோள்/ எடுகோள்/ PROPOSITION:**
- **II. ஹேது/ ஏது/REASON**
- **III. உதாரணம்/EXAMPLE**
- **IV. உபநயம்/ APPLICATION/ WINDING UP**
- **V. நிகமணம்/ CONCLUSION**

**2.2. தன்பொருட்டு அனுமானம்/ SVAARTHA ANUMAANA:** One cannot persuade another unless he is convinced himself.

***வைசேடிகர்கள்/ VAISESHIKAS – காண்டல், கருதல் இரண்டையும் பிரமாணமாக கொள்வர். இவர்களுக்கு நூல் வைசேடிக சூத்திரம்; இதைச் செய்தவர் கணாதர்.***

**அணுக்கொள்கை:** மேலும் பிரிக்க முடியாத மிகச்சிறிய துணிக்கை அணு. உலகம் யாவும் அணுக்களின் கூட்டமும், பிரிப்புமே.

அணு அழியாது.

அணுவை இயக்குவது இறை.

சமணரும் அணுக் கொள்கை உடையவர்கள்; ஆனால் இறையை ஏற்றுக்கொள்ளாதவர்கள். **சப்தபங்க வாதம்.**

I. **ஷியாத் அஸ்தி**
II. **ஷியாத் நாஸ்தி**
III. **ஷியாத் அவ்வியக்தம்**
IV. **ஷியாத் அஸ்தி; நாஸ்தி**
V. **ஷியாத் அஸ்தி; அவ்வியக்தம்**
VI. **ஷியாத் நாஸ்தி; அவ்வியக்தம்**
VII. **ஷியாத் அஸ்தி; நாஸ்தி; அவ்வியக்தம்**

**பிரமாணம் 3. உரை/ ஆப்த வாக்கியம்/ SABDA/ AABDHA VAAKYA/ AUTHENTIC TESTIMONY:**

**Instruction or expression from a reliable or valid source or person.**
**தக்கோர்/ தகுதி வாய்ந்தோர்/ அனுபவம் உடையோர்/ அறிவுடையோர் கூற்று.**
**யார் தக்கோர்?**
**Qualified person**
**Qualified Authority**
**Reliable/ Trust worthy person/ authority/ source**
**Validity depends on it.**

**மக்கள்/ மூத்தோர்/ அறிஞர்/ செல்வர்/ அதிகாரம் உடையோர்/ பக்தர்/ முனிவர்/ ரிஷிகள்/ ஞானி/ தேவர்/ தெய்வம்/ அவதாரம்/ கடவுள்**

**வேதம் என்பது இதுவே.**

**பிரமாணம் 4. உபமானம்/ உவமானம்/ ஒப்பு/உவமை/ UPAMAANA/ COMPARISION:**
வீட்டுப் பசுவைக் காட்டிக் காட்டுப்பசுவை அறிதல்

**பிரமாணம் 5. அருத்தாபத்தி / பொருட்பேறு / ARTHTHAA-PATHTHI /** DEDUCTION:

**பகல் உண்ணான்; பருத்திருப்பான்**

***மீமாம்சை – இதற்கு நூல் செய்தவர் ஜைமினி. இது பின்னால் இரு பிரிவானது. பிரபாகரர் விளக்கம் கொடுத்து தாபித்தது பிரபாகர மீமாம்சை. இதற்கு அருத்தாபத்தியும் ஒரு தனிப் பிரமாணம்.***

**பிரமாணம் 6. அனுபலப்தி/ அனுபலத்தி/ அபாபம்/ இன்மை/ NEGATION or NON-EXISTENCE BY NON-COGNITION**

**மேசை மேல் புத்தகம் உண்டு; மேசை மேல் புத்தகம் இல்லை.**

***குமாரில பட்டர் செய்த பட்ட மீமாம்சைக்கு இதுவும் ஒரு தனிப் பிரமாணம்.***

**அளவை காண்டல், கருதல், உரை, அபாவம், பொருள், ஒப்பு ஆறு என்பர்,
அளவை மேலும் ஒழிபு ,உண்மை, ஐதிகத்தோடு ,இயல்பு என நான்(கு)
அளவை காண்பர்; அவையிற்றின் மேலும் அறைவர்; அவை எல்லாம்,
அளவை காண்டல், கருதல், உரை என்ற இம் மூன்றில் அடங்கிடுமே.**

Means of knowledge are six in number:



1. **காண்டல்** - kāṇḍal - pratyaksha is Direct perception by the organs of senses,
2. **கருதல்** – karuthal – anumāna is Inference from previous experience / deduction or critical reasoning,
3. **உரை**- urai – sabda is Authentic Testimony of others - āptha vākya- both verbal and written,
4. **அபாவம்** – abhāvam – abhāva is negation/ non- existence by non-cognition,
5. **பொருள்**- poruḷ - arththā-paththi is Deduction and
6. **ஒப்பு** - oppu is Analogy or Comparison says the learned;

Others add four more to this:

7. **ஒழிபு**- ozhipu - pāri-sēsha is Inference by exception/elimination,
8. **உண்மை**- uṇmai – sambhava is co-existence /obvious probability,
9. **ஐதிகம்**- aitheekam – aithīka is Tradition / popular belief and
10. இயல்பு – iyalpu – subhāva is Natural Inference / common sense or evidence inherent in things;

சீரார் **ஒழிபு** என்று செப்பப்படுவது திண்புவி மேல்
போராடி நின்று பொருதார் இருவர் தம் போர்க்களத்து
பாரார் இராகவன் வென்றான் எனில் தன் பரிசழிந்து
நேராம் இராவணன் தோற்றல் சொல்லாமல் நிகழ்வதுவே.

துயக் கற்ற **உண்மை** என நாவலர்கள் துணிந் துரைப்பது
இயற்கைப் பொருளினை இற்றெனலாம் இது தானுரைக்கின்
இயக்குற்ற கால் சலிக்கும், தீச் சுடும், நீரது குளிரும்,
வயக்குற்ற மண் வலிதென்று பட்டாங்கு வழங்குவதே.

கொன்பயில் வேலைக்கடல் புடை சூழுங் குவலயத்தோர்
அன்புடன் ஆலில் அலகை உண்டென்பர்கள் என்பதுவும்,
மின்பயில் புற்றில் விடநாகம் உண்டென்பர் என்பதுவும்
அன்பொடு சேரு நன் நாவலர்தாம் **ஐதிகம்** என்பரே.

மாமேல் இருந்தொரு கோல்தா எனில் சுள்ளிக்கோல் தரலும்
தூமேல் இருந்தொரு கோல்தா எனில் துணிவோடு சென்று
பூமேவு கண்ணெழுதும் கோல் கொடுத்தலும் பூதலத்தில்
தாமே **இயல்பு** என்று கூறுவர் தக்க சொல் நாவலரே.

11. **சிற்சக்தி:** இறையின் அருட்சக்தி ஒன்றே இவை எல்லாவற்றிலும் முக்கியமான பிரமாணமாய் இருந்து பெத்த நிலையில் இவற்றின் ஊடாக சிறிது சிறிதாக படிப்படியாக மெய்யைக் காட்டி ஈற்றில் முத்திநிலையில் இவ்வாறு காட்டிய சிந்தனைக்கு உட்பட்ட உண்மை யாவற்றையும் நீக்கி

சிந்தனை ஐயம் குறைகளுக்கு அப்பால் மெய்யை முற்றுமுழுதாகக் காட்டுவது. சிவாக்கிரயோகி. ஞானப்பிரகாசர் ஆகியோர் இதை பௌஷ்கர ஆகமத்தில் இருந்து எடுத்துக்காட்டுவர்.

**அறிவது ஆன்மாவின் ஞானசக்தி.**

## ஷட் தரிசனங்கள்

1. **சாங்கியம்:** காண்டல், கருதல், உரை. இறையை ஏற்காது.
   நூல் செய்தது – கபிலர்
   புருடன் – அறிவுடைப் பொருள் – ஆகவே நிலைமாற்றம் இல்லை
   பிரகிருதி – அறிவில் பொருள் – ஆகவே நிலைமாற்றம் உண்டு. முக்குண தோஷம், அவற்றின் தீராதபோராட்டம்.
   புருடன் (உயிர்கள்) சன்னிதியில் / முன்னிலையில் பிரகிருதி இயங்கும்.
   இறை தேவை இல்லை. இந்த ஞானம் விடுதலைக்கு வழி.
   There is a conscious force behind this world.

2. **யோகம்:** காண்டல். கருதல், உரை. இறையை ஏற்கும்.
   நூல் செய்தது – பதஞ்சலி. சாங்கியம் சொல்லும் அவ்வளவும் ஏற்கும்.
   ஆனால் இவற்றின் இயக்கும் இறை உண்டு. தியானம் விடுதலைக்கு வழி.

3. **நியாயம்:** காண்டல். கருதல், உரை. இறையை ஏற்கும்.
4. **வைசேடிகம்:** காண்டல், கருதல், உரை. இறையை ஏற்கும்.
5. **மீமாம்சை:** காண்டல், கருதல், உரை. இறையை ஏற்காது.
6. **வேதாந்தம்:** காண்டல், கருதல், உரை. இறையை ஏற்கும்.

   **வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்:** காண்டல், கருதல், உரை. இறையை ஏற்கும்.

   **சமணம், பௌத்தம்:** காண்டல், கருதல் ஏற்கும். உரையை ஏற்காது. இறையை ஏற்காது;

   **உலகாயதம்:** காட்சி மட்டுமே பிரமாணம்.

| **வைசேடிகம்** | **சம்பந்தம் - 2** |
|---|---|
| நூல் – வைசேடிக சூத்திரம் | 1. சம்யோக சம்பந்தம் – பிரிக்கக் கூடியது. உ-ம்: மேசையின் மேல் புத்தகம். |
| கணாதர் | 2. சமவாய சம்பந்தம் – பிரிக்க முடியாதது. உ-ம்: மேசையின் கால் |
| **பதார்த்தங்கள் - 7** | **உலகிற்கு மூலம் - 9** |
| 1. திரவியம் - SUBSTANCE | பஞ்ச பூதங்கள் - 5 |
| 2. குணம் - ATTRIBUTES | காலம் |
| 3. கருமம் - ACTION | இடம் |
| 4. சாமானியம் - GENERALITY | ஆத்மா |
| 5. விசேடம் - PARTICULARITY | மனம் |
| 6. சமவாயம் - INHERENCE | **அணுக்கொள்கை** |
| 7. அபாவம் – NON-ATTRIBUTE/ NEGATION | **இயக்குபவன் - இறைவன்** |

| **நியாயம்** | **பதார்த்தங்கள் 16** |
|---|---|
| நூல் : நியாய சாஸ்திரம் | **பிரமேயம் – OBJECTS OF KNOWLEDGE** |
| கௌதமர், வாத்சாயனர் | **பிரமாணம் – MEANS OF KNOWLEDGE** |
| | **சம்சயம் – UNCERTAINITY/ DOUBT** |
| | **பிரயோயனம் – PURPOSE/ AIM** |
| | **திருஷ்டாந்தம் – INDUCTIVE PROOF** |
| | **சித்தாந்தம் – ESTABLISHED DOCTRINE** |
| | **அவயவம் – MEMBERS OF SYLLOGISM** |
| | **தர்க்கம் - CONFUTATION** |
| | **நிர்ணயம் - ASCERTAINMENT** |
| | **வாதம் – DISCUSSION/ RIGHT REASONING** |
| | **ஜல்பம் – WRANGLING OF BOTH PARTIES** |
| | **விதண்டம் – OPPONENT NOT ESTABLISHING BUT REFUTING** |
| | **ஹேதுவுபாசம் - FALLACY** |
| | **சளக்கை – QUIBLE/ WORD JARGAIN** |
| | **ஜாதி - FUTILITY** |
| | **நிக்கிரகத்தானம் – GROUND OF DEFEAT** |
| | |
| | |

| | |
|---|---|
| | **பிரமேயம் - 12** |
| | **ஆத்மா - SELF** |
| | **சரீரம் - BODY** |
| | **இந்திரியம் - SENSES** |
| | **அர்த்தம் – OBJECT OF SENSES** |
| | **புத்தி - COGNITION** |
| | **மனம் - MIND** |
| | **பிரவிருத்தி - ACTIVITY** |
| | **தோஷம் - FAULT** |
| | **பிரத்யாபாவம் - TRANSMIGRATION** |
| | **பலம் - FRUIT** |
| | **துக்கம் - PAIN** |
| | **அபவர்க்கம் - LIBERATION** |

# **சைவ சித்தாந்தம்**

ஆகின்ற தொண்ணூற்றோ டாறும் பொதுஎன்பர்
ஆகின்ற ஆறா(று) அருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ்வே தாந்திக்கு வைணவர்க்(கு)
ஆகின்ற நாலா(று)ஐ யைந்துமாயா வாதிக்கே

- **திருமந்திரம் 2179**

| தத்துவங்கள் – 24/ 36 | **அறுசமயங்கள்** |
|---|---|
| | |
| பிரமாணவியல் | |
| இலக்கணவியல் | |
| சாதனவியல் | |
| பயனியல் | |
| | |
| சடம்/ அசித்து | சித்து |
| - பரிணாமம்<br>- விருத்தி<br>- உருமாற்றம்<br>- அவயவப் பகுப்பு<br>- நிலை மாற்றம் – தோன்றி, நின்று, ஒடுங்குதல்<br>- சுட்டி அறியப்படுவது – DEMONSTRATIVE METHOD OF KNOWING<br>- அறிவித்தாலும் அறியாது - NESCIENT/INSENTIENT/ UNINTELLIGENT | அறிவு<br>உணர்வு<br>(அனுபவம்)<br>OMNISCIENT – முற்றறிவு/தானாகவே இயல்பாகவே யாவும் அறிதல்<br>PARVISCIENT – சிற்றறிவு, அறிவிக்க அறியும் |
| | |
| சத்து | **சுருதி/ யுக்தி/ அனுபவம்** |
| அசத்து | |
| | |
| சத்-சித்-ஆனந்தம் | **தடத்தம்/ சொரூபம்** |
| | |
| முதற்காரணம் | **MATERIAL CAUSE** |
| துணைக் காரணம் | **INSTRUMENTAL CAUSE** |
| நிமித்த காரணம் | **EFFICIENT / EXTERNAL CAUSE/ FORCE** |
| | |
| மூலவினை | **முதலுற்பவம்** |
| தூலவினை | **புனருற்பவம்** |
| | |
| | |

## சொற்பொருள் விளக்கம்

**பிரமேயம் 12**

1. **ஆத்மா: Desire,aversion, volition, pleasure, pain and intelligence are the qualities of Atma.**
   **விருப்பு, வெறுப்பு, இச்சை, சுகம், துக்கம், அறிவு ஆகியவை ஆன்மாவின் குணங்கள்.**

   ***ஸர்வம் ஆப்னோதி இதி ஆத்மா***
   *எங்கும் வியாபித்தது ஆத்மா*
   ***ஸர்வம் ஆதி இதி ஆத்மா***
   *எல்லாவற்றையும் அனுபவிப்பது ஆத்மா*

2. **சரீரம்:** இச்சை, செயலுக்கு இடமாய் அமைவது சரீரம்.
   BODY-MIND-SENSE COMPLEX
   *வேற்று விகார விடக் குடம்பின் உட் கிடப்ப – சிவபுராணம்*
   *மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா – சிவஞானபோதம்*

3. **இந்திரியம்:** பொறிவாயில் / INSTRUMENTS
   – கண், காது, மூக்கு, நா, தோல். பஞ்சபூதங்களுடன் தொடர்புடையது.
   *இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்*
   *அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்*
   *சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட*
   *அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே*
   - *திருவாசகம்*

   *பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
   *நெறிநின்றார் நீடு வாழ்வார் – திருக்குறள்*

நற்செவி, துவக்கு, கண், நா, நாசி ஐந்தினையும் நல்லோர்
புத்தி இந்திரியம் என்று புகன்றனர்; இவை தமக்குச்
சத்த(ம்), நற் பரிச(ம்), ரூப(ம்), இரத(ம்), கந்தங்கள் ஐந்தும்
வைத்தனர் விடயமாக; அடைவினில் மருவும் என்றே.
- **சிவஞானசித்தியார் 151**

வாக்கொடு பாதம் பாணி பாயுவோடு உபத்தம் ஐந்து
நீக்கினர் முன்னே கன்மேந் திரியங்கள் என நினைந்தே
ஆக்கிய வசன, கமன, தானமும், விசர்க்க, ஆனந்தம்
ஊக்கமார் ஐந்தும் ஐந்தின் தொழில் என ஓதினாரே.
**சிவஞானசித்தியார் 152**

4. **அர்த்தம்:** இந்திரியங்கள் பற்றும் பொருள்;
   **-** சப்த, ரஸ, ஸ்பரிச, கந்த, ரூபம்

5. **புத்தி/ COGNITION –** அறிவு, ஞானம், உபலப்தி – APPREHENSION

சித்தமாம் அவ்வியத்தம் சிந்தனை அதுவும் செய்யும்;
புத்தி அவ்வியத்தில் தோன்றிப் புண்ணிய பாவம் சார்ந்து,
வத்து நிச்சயமும் பண்ணி, வரும் சுக துக்க மோகப்
பித்தினில் மயங்கி, ஞானக் கிரியையும் பேணி நிற்கும்.
-சிவஞானசித்தியார் 148

6. **மனம்: அக இந்திரியம் –** INTERNAL SENSE ORGAN

ஆங்காரம் புத்தியின் கண் உதித்து, அகந்தைக்கு வித்தாய்
ஈங்கு ஆர்தான் என்னோடு ஒப்பார் என்று, யான் என்னது என்றே
நீங்காதே நிற்கும்; தானும் மூன்றதாய் நிகழும் என்பர்
பாங்கு அப் பூதாதி, வைகாரிகம், தைசதம் தான் அன்றே.
சிவஞானசித்தியார் - 149

மனமது தைசதத்தின் வந்து; ஒரு பொருளை முந்தி
நினைவதும் செய்து, அங்கு ஐய நிலைமையின் நிற்கும்; ஆங்கே
இனமலி சோத்திராதி, கன்ம இந்திரியம் எல்லாம்
முனம் உரை செய்த வைகாரிகம் தரும் என்பர் முன்னோர்.
- சிவஞானசித்தியார் 150

வாய் ஆதி சோத்தி ராதி புறத்து வாழ் கருவி யாகும்
ஓயாத மனாதி காயத்துள் உணரும் உட் கருவி யாகும்
ஆய்வார்கட்கு அராகம் ஆதி அவற்றின் உட் கருவி என்பர்
மாயாள் தன் வயிற்றி(ல்) இவற்றால் துடக்குண்டு வாழும் ஆன்மா.
சிவஞானசித்தியார் 153

7. **பிரவிருத்தி:** ACTION BY OUR THOUGHTS, WORDS AND DEEDS.
மனம், வாக்கு, காயங்களால் செய்யப்படும் காரியங்கள்

8. **தோஷம்:** காரியங்களுக்கு மூலமான இராகம், துவேஷம், கோபம், மோகம், மதம், மாற்சரியம் முதலான குற்றங்கள்.

9. **பிரத்தியாபாவம்:** மறுபிறப்பு: ஆத்மா உடலுடன் தொடர்புறல் பிறப்பு. இது கர்ம வினைப்படி வரும்.

10. **பலம்/FRUIT- விளைவு.** இது எமது தோஷங்களினாலும் காரியங்களினாலும் வருவது.

11. **துக்கம்/ PAIN:** துன்ப அனுபவங்களினால் வருவது

## 12. அபவர்க்கம்/ விடுதலை/ விடுதளை/ முக்தி/ மோக்ஷம்

## ABSOLUTE FREEDOM FROM ALL SUFFERINGS

**இம்மையே ஈரெட்டு ஆண்டு எய்தி எழில் ஆரும்**
**ஏந்திழை ஆர் முத்தி என்றும், இரும் சுவர்க்க முத்தி**
**அம்மையே என்றும், முத்தி ஐந்து கந்தம்**
**அறக்கெடுகை என்றும், அட்ட குணமுத்தி என்றும்,**
**மெய்ம்மையே பாடாணம் போல்கை முத்தி என்றும்,**
**விவேகமுத்தி என்றும், தன் மெய்வடிவாம் சிவத்தைச்**
**செம்மையே பெறுகை முத்தி என்றும் செப்புவர்கள்;**
**சிவன் அடியைச் சேரும் முத்தி செப்புவது இங்கு யாமே.**

சிவஞானசித்தியார் – 264

கரணங்கள் கெடவிருக்கை முத்தியா மென்னில்
கதியாகும் சினைமுட்டை கருமரத்தின் உயிர்கள்
மரணங்கொண் டிடஉறங்கி மயங்கிமூர்ச் சிக்க
வாயுத்தம் பனைபண்ண வல்விடத்தை அடையச்
சரணங்கள் புகுநிழல்போல் தனைஅடையுஞ் சமாதி
தவிராது மலமிதுவும் பசுஞான மாகும்
அரணங்க ளெரித்தவன்தன் அடியைஅறி விறந்தங்(கு)
அறிந்திடர் செறிந்ததுகள் அகற்றி டீரே.

சிவஞானசித்தியார் – 294

அரிவையர் இன்புறும் முத்தி, கந்தம் ஐந்தும்
அறும் முத்தி, திரி குணமும் அடங்கும் முத்தி,
விரவு வினை கெடும் முத்தி, மலம் போம் முத்தி,
விக்சிரகம் நித்தம் முத்தி, விவேகம் முத்தி,
பரவும் உயிர் கெடும் முத்தி, சித்தி முத்தி,
பாடாண முத்தி, இவை பழி சேர் முத்தி
திரி மலமும் அகல, உயிர் அருள் சேர் முத்தி
திகழ் முத்தி, இது முத்தித் திறத்தது ஆமே.

- சிவப்பிரகாசம் 50

போதோந்ய ஸாதனேப்யோ ஹி
ஸாக்ஷான் மோக்ஷைக ஸாதனம் |
பாகஸ்ய வஹ்னி வஜ்ஜ்ஞானம்’
வினா மோக்ஷோ ந ஸித்யதி ||

அறிவொன்றே நேர்முக்தி சாதன மாகும்
பிற சாதனங்களின் பேறாம் – அறிவின்றி
ஆகாது முக்தியுறல் அக்கினியின்றிப் பாகம்
ஆகாதவாறு என்று அறி.

**-** ஆதிசங்கரர் அருளிய ஆன்மபோதம் - சுலோகம் 02
அழகு தமிழில் இரமண மஹரிஷி

## பதார்த்தங்கள் 16

1. **பிரமேயம்:** முன் சொல்லப்பட்ட 12ம் பிரமேயம், அறியப்படு பொருள்.

2. **பிரமாணம்:** அறியும் வழிவகை/ MEANS OF KNOWLEDGE

**காண்டல்**
**கருதல்**
**உரை:**

ஓது சமயங்கள், பொருள் உணரு நூல்கள்
ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் உளபலவும்; இவற்றுள்
யாது சமயம்? பொருள் நூல் யாது இங்கு? என்னின்
இது ஆகும்; அது அல்லது எனும் பிணக்கது இன்றி
நீதியினால் இவை எல்லாம் ஓரிடத்தே காண
நின்றது யாதொரு சமயம்? அது சமயம்; பொருள் நூல்
ஆதலினால் இவை எல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கியிடும்; அவை இரண்டும் அரன் அடிக் கீழ் அடங்கும்.

- சிவஞானசித்தியார் 265

அருமறை ஆகமம் முதனூல், அனைத்தும் உரைக்கையினால்;
அளப்பரிதாம் அப்பொருளை அரன் அருளால் அணுக்கள்
தருவர்கள் பின் தனித்தனியே, தாம் அறிந்த அளவில்
தர்க்கமொடு உத் தரங்களினால் சமயம் சாதித்து;
மிருதி, புராணம், கலைகள் மற்றும் எல்லாம்
மெய்ந்நூலின் வழி, புடையாம் அங்கம்,வே தாங்கம்
சுருதி, சிவாகமம் ஒழியச் சொல்லுவது ஒன்று இல்லை
சொல்லுவார் தமக்கறையோ சொல்லொ ணாதே.

- சிவஞானசித்தியார் 266

வேத நூல், சைவ நூல் என்று இரண்டே  நூல்கள்;
வேறு  உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்;
ஆதிநூல், அநாதி அமலன் தரு நூல் இரண்டும்,
ஆரண நூல் பொது; சைவம் அரும்சிறப்பு நூலாம்;
நீதியினால் உலகர்க்கும், சத்தி நிபாதர்க்கும்
நிகழ்த்தியது; நீள்மறையின் ஒழிபொருள், வேதாந்தத்
தீதுஇல் பொருள் கொண்டு  உரைக்கும் நூல் சைவம்; பிற நூல்
திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்.

- சிவஞானசித்தியார் 267

-

தொன்மையவாம் எனும்எவையும் நன்றாகா; இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா; துணிந்த
நன்மையினார் நலங்கொள்மணி பொதியும் அதன் களங்கம்

நவையாகா தென உண்மை நயந்திடுவர் நடுவாந்
தன்மையினார் பழமை அழகு ஆராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின் கண் சார்வு ஆராய்ந்து அறிதல்
இன்மையினார் பலர்புகழில் ஏத்துவார் ஏதிலர் உற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கென ஒன்று இலரே

- சிவப்பிரகாசம் 12

**உவமானம்/ ஒப்பு**
**அருத்தாபத்தி/ பொருள்**
**அனுபலப்தி/ அபாவம்/ இன்மை**
**ஒழிபு**
**உண்மை**
**ஐதீகம்**
**இயல்பு**

3. **சம்சயம் –** ஐயம்/ சந்தேகம்/ உறுதியாக தெரியாதது.
   இது அறிவின்மை அல்ல. இது ஐவகைகளில் வரும்.

- பொது இயல்பை பொதுமைப் படுத்தல்
- சிறப்பியல்பை அறியாதிருத்தல்
- முரண்படும் நூல்கள்
- அறிதலில் முறையின்மை
- அறியாப் பொருள்களின் முறை/ அறிவு இன்மை

4. **பிரயோயனம்:** நோக்கம், இலக்கு

5. **திருஷ்டாந்தம்: INDUCTIVE PROOF.** உவமை அல்ல; உவமையில் கற்பனையும் வரும்.
   சூரியனும் அதன் ஒளியும் போல் சிவமும் சக்தியும்
   அந்தக் கரணத்தில் ஒன்றன்று ஆன்மா
   மனச் சாட்சி. சாட்சி ஒன்று இருந்தால் குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவர் இருக்க வேண்டும். அவர் யார்? ஆன்மா.

6. **சித்தாந்தம்:** முடிந்த முடிபு. விதிகள், பிரமாணங்களுக்கு ஊடாகமுறையாக நிரூபிக்கப்பட்டது –THE SUBJECT WHICH IS ESTABLISHED BEYOND DOUBT.

7. **அவயவம்: அதிகரணத்தின் ஐந்து பகுதிகள் / FIVE MEMBERS OF SYLLOGISM**
   I. **எடுகோள்/ மேற்கோள்/ பிரதிக்ஞா/PRATIJNA**
   II. **ஏது/HETU/ REASONING**
   III. **உதாரணம்/ UDHARANA**
   IV. **பிரயோகம்/ UPANAYA/APPLICATION**

## V. நிர்ணயம்/ முடிபு/ NIGAMANA/ CONCLUSION

தன்னால் கூறப்படும் பொருளும்
அதன்கண் ஐயப்பாடும் ( சம்சயம்)
அதற்குப் பிறர் கூறும் பக்கமும் (பூர்வபட்சம்)
அதனை மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபும் (சித்தாந்தம்)
இயைபும் என ( வாதப் பிரதிவாதங்களின் தொகுப்பு – SEQUENCE OF APPROPRIATION IN AN ARGUMENT)
இவற்றின் நிலைக்களம் ஈண்டு அதிகரணம் எனப்படும்.
- சிவஞானபோதச் சிற்றுரை

**பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம்:** அது பிறிதொன்றையும் குறித்துவிடக்கூடாதவாறு கூறுதல் உ-ம்: சங்கார காரணனாகிய முதலையே முதலாக உடைத்து.
**அதிவியாப்திக் குற்றம்:** இன்னொன்றையும் குறிக்கக் கூடியதாக இருத்தல். உ-ம் ஆடு – நாற்கால் விலங்கு
**அவ்வியாப்திக் குற்றம்:** குன்றக் கூறல்
**அசம்பவம்:** தப்பாக கூறுதல்

8. **தர்க்கம்:** மற்றொருவரின் கருத்தின் பொருந்தாமையை வெளிப்படுத்திச் சாடுதல். REBUTTAL/ REFUTTING SOMEONE'S POINT FORCEFULLY THROUGH EXPOSING THE ABSURDITY IN THEIR ARGUMENT.

9. **நிர்ணயம்:** மற்றொருவரின் கருத்தின் பொருந்தாமையை வெளிப்படுத்தித் தன் கருத்தை நிலைநாட்டல். ASCERTAINMENT. ESTABLISHING THE SELF OPINION BY REJECTING THE OPPONENTS' ARGUMENTS.

10. **வாதம்/ விவாதம்:** பிரமாணங்களுடன் கூடிய தர்க்க ரீதியான உரையாடல். உ-ம் பாராளுமன்ற விவாதம்

11. **ஜல்பம்: செப்பை/ சப்பை/ WRANGLING.** ஒரு ஒழுங்கான விதி முறை இல்லாமல் தன் கருத்தை நிலைநாட்ட முயல்தல்

12. **விதண்டை/ CAVIL-** தன் கருத்தை நிலை நாட்ட முயலாது எதிராளியின் கருத்தையே சாடிக்கொண்டிருத்தல்.

13. **ஹேதுவுபாசம் – தவறான விளக்கம்/ WRONG REASONING**

14. **சளக்கை/ QUIBLE / WORD JARGAIN:** வெற்று வார்த்தைகள்/ அலங்கார வார்த்தைகள் / எதிராளியின் கருத்தின் தவறான புரிதல்

**15. ஜாதி/ FUTILITY: உவமையின் தவறான புரிதல்**
உ-ம்: அவன், அவள், அது

**16. நிக்கிரக/ தோல்வித்தானம் – 65/ POINTS FOR DEFEAT**

குன்றக் கூறல்; மிகைபடக் கூறல்;
கூறியது கூறல்; மாறுகொளக் கூறல்;
வழூஉச் சொல் புணர்த்தல்; மயங்க வைத்தல்;
வெற்று எனத் தொகுத்தல்; மற்று ஒன்று விரித்தல்;
சென்று தேய்ந்து இறுதல்; நின்று பயன் இன்மை;
என்று இவை ஈர் ஐங் குற்றம் நூற்கே

**- நன்னூல் சூத்திரம் - 12**
**குவலயானந்தம் -271**

1) குன்றக் கூறல் – The point wasn't revealed enough;
2) மிகை படக் கூறல் - Talking in exaggeration;
3) கூறியது கூறல் – Repetitive talk;
4) மாறு கொளக் கூறல் – Contradicting with the statements you already made;
5) வழூஉச் சொல் புணர்த்தல் – Usage of misnomer words;
6) மயங்க வைத்தல் – Ambiguous talk;
7) வெற்று எனத் தொகுத்தல் - Verbose talk;
8) மற்று ஒன்று விரித்தல் – Talking irrelevantly;
9) சென்று தேய்ந்து இறுதல் – Loosing grip of the point to be stressed as the talk goes on;
10) நின்று பயன் இன்மை – Usage of useless words in the conversation.

சிதைவு எனப்படுபவை வசைஅற நாடின்
கூறியதுகூறல்; மாறுகொளக்கூறல்;
குன்றக்கூறல்; மிகைபடக்கூறல்;
பொருள்இல கூறல்; மயங்கக் கூறல்;
கேட்போர்க்கு இன்னா யாப்பிற்றுஆதல்;
பழித்த மொழியான் இழுக்கம் கூறல்;
தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்;
என்ன வகையினும் மனக்கோள் இன்மை;
அன்ன பிறவும் அவற்றுவிரி ஆகும்.

**-தொல்காப்பியம்சூத்திரம் 1608**

**Explication:**
1) கூறியது கூறல்–Repetition
2) மாறுகொளக் கூறல்– Contradicting statements in conversation
3) குன்றக் கூறல் - Not revealed enough in conversation
4) மிகைபடக் கூறல்–Exaggerative talk
5) பொருள்இல கூறல் - Meaningless talk
6) மயங்கக் கூறல்– Ambiguous talk
7) கேட்போர்க்கு இன்னா யாப்பிற்று ஆதல் - Hurting others' feelings in conversation

8) பழித்த மொழியான் இழுக்கம் கூறல்–degrading others by the usage of insulting words
9) தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல் - Talking on his own assumption
10) என்ன வகையினும் மனக்கோள் இன்மை–No definite message conveyed

நிகமனம் என்ன ஐந்து உள அவற்றில்
பக்கம் இம்மலை நெருப்புடைத்து என்றல்
புடையுடைத்து ஆதலால் எனல் பொருந்து ஏது
வகை அடுக்களை போல் திட்டாந்தம்
உபநயம் மலையும் புடையுடைத்து என்றல்
நிகமனம் புடையுடைத்தே நெருப்புடைத்து எனல்

- மணிமேகலை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, வரி 57- 63

நெருப்புடைத்து அல்லாது யாதொன்று அது புகைப்
பொருத்தம் இன்று புனல்போல் என்றல்
மேவிய பக்கத்து மீட்சி மொழி ஆய்
வைதன்மிய திட்டாந்தம் ஆகும்

- மணிமேகலை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, வரி 64- 67ஏதம் இல் திட்டாந்தம் இரு வகைய

சாதன்மியம் வைதன்மியம் என
சாதன்மியம் எனப்படுவது தானே
அநித்தம் கட ஆது அந்நுவயத்து என்கை
வைதன்மிய திட்டாந்தம் சாத்தியம்
எய்தா இடத்தில் ஏதுவும் இன்மை

- மணிமேகலை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, வரி 136- 141

யாதொன்று யாதொன்று பண்ணப்படுவது
அநித்தம் கடம் போல் என்றல் பக்கத்
தொடர்ச்சி....

- மணிமேகலை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, வரி 72- 75

...............யாதொன்று அநித்தம் அல்லாதது
பண்ணப் படாதது ஆகாசம் போல் எனல்
விபக்கத் தொடர்ச்சி மீட்சி மொழி என்க.

- மணிமேகலை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, வரி 75 -77

ஒட்டிய உபநயம் நிகமனம் இரண்டும்
திட்டாந்தத்திலே சென்று அடங்கும்

- மணிமேகலை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, வரி 109- 110